# தமிழினத்தின் வீரத்தளபதி



**வி.சபேசன்**
*(ஒரு பேப்பருக்காக )*

2004ஆம் ஆண்டு மார்ச் மாதம் கருணா வரலாற்று துரோகம் இழைத்திருந்த காலம். தமிழ் மக்கள் மிகவும் சோர்ந்து போயிருந்தார்கள். தமிழர்கள் எங்கு சந்தித்தாலும் இதுதான் பேச்சாக இருந்தது. மட்டக்களப்பு மாவட்டத்தின் அமைவிடமும் வேறு சில சூழ்நிலைகளும் கருணாவிற்கு சாதகமாக இருந்த நிலையில், இதை எப்படி விடுதலைப் புலிகள் சமாளிக்கப் போகிறார்கள் என்ற அச்சம் கலந்த எதிர்பார்ப்பு தமிழர்கள் மத்தியில் பரவியிருந்தது.

எல்லோரையும் போன்று நானும் என்னுடைய நண்பர்களும் சந்திக்கின்ற போதும் இது தான் பேச்சாக இருந்தது. இப்படியான ஒரு சந்திப்பின் போது அச்சம், கவலை, கோபம் கலந்த உணர்வுகளோடு நாம் பேசிக் கொண்டிருந்த பொழுது, ஒரு ஊடக நண்பரின் தொலைபேசி அழைப்பு வந்தது. ‘பால்ராஜ் அண்ணை வாகரையில் படையணிகளோடு வந்து நிற்கிறாராம்’ நண்பர் சொல்லிவிட்டு தொலைபேசியை வைத்து விட்டார்.

’பால்ராஜ் அண்ணை வாகரையில் நிற்கிறார் என்ற செய்தியைக் கேட்டதும் அதுவரை எம்மிடம் இருந்த அச்சங்கள் பறந்து போய் விட்டது. அந்தச் செய்தி உண்மையா பொய்யா என்று எமக்கு அப்பொழுது தெரிந்திருக்கவில்லை. சொன்னவரும் அதை உறுதியான முறையில் சொல்லவில்லை. என்றாலும் ‘பால்ராஜ்’ என்னும் அந்தப் பெயரை கேட்ட உடனேயே எமக்குள் ஒரு நம்பிக்கையும் உற்சாகமும் வந்து விட்டது.

பால்ராஜ் இருக்கும் இடத்தில் வெற்றி இருக்கும் என்பது எமக்குத் தெரியும். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் எத்தனையோ வீரத் தளபதிகளை உருவாக்கியிருக்கிறது. அந்த வீரத் தளபதிகளுள் பால்ராஜ் தலைமையானவர் என்று சொல்வதில் எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை.

பிரிகேடியர் பால்ராஜ் 1983ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டார். இந்திய ஈழப் போரின் போது, தேசியத் தலைவருடன் நின்று மணலாறுக் காடுகளில் போரிட்டார். பால்ராஜின் திறமையை இனம் கண்டு கொண்ட தேசியத் தலைவர் இரண்டாம் கட்ட ஈழப் போரில் வன்னிப் பகுதியில் நடந்த சண்டைகளுக்குப் பொறுப்பாக பால்ராஜை நியமித்தார்.

இரண்டாம் கட்ட ஈழப் போர் பல முனைகளின் நடந்து கொண்டிருந்தது. கிழக்கை சிறிலங்காப் படைகள் கைப்பற்றியிருந்தன. யாழ் குடாவில் தீவுப் பகுதிகள், வலிகாமம் வடக்கு போன்ற பகுதிகளில் சிறிலங்காப் படையினர் முன்னேற்றங்களை கண்டிருந்தனர். அன்றைய பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேயரட்ண ஒவ்வொரு வாரமும் புதன் கிழமைகளில் ஊடகவியலாளர்களை சந்தித்து வெற்றிச் செய்திகளை சொல்லிக் கொண்டிருந்தார்.

ஆனால் வன்னியில் சிறிலங்காப் படைகளின் முகாம்கள் ஒவ்வொன்றாக விழுந்து கொண்டிருந்தன. விடுதலைப் புலிகளின் தாக்குதலை சமாளிக்க முடியாமல் சிறிய முகாம்களை மூடிவிட்டு சிங்களப் படையினர் ஓடினர். சற்றுப் பெரிய முகாமாக இருந்த கொக்காவில் முகாம் மீது தாக்குதல் தொடுத்த விடுதலைப் புலிகள் அதனைக் கைப்பற்றிக் கொண்டனர்.

**பால்ராஜ் அண்ணை வாகரையில் நிற்கிறார் என்ற செய்தியைக் கேட்டதும் அதுவரை எம்மிடம் இருந்த அச்சங்கள் பறந்து போய் விட்டன. ஏனென்றால் பால்ராஜ் இருக்கும் இடத்தில் வெற்றி நிச்சயம் என்பது எல்லோருக்கும் தெரியும்**

கொக்காவில் முகாம் மீதான தாக்குதலுக்கு தளபதி பால்ராஜ் தலைமை தாங்கினார். ஒரு சில நாட்களில் கொக்காவில் முகாம் விடுதலைப் புலிகளின் கைகளில் விழுந்தது. அன்றைக்கு அது சிங்கள அரசுக்கு ஒரு பெரும் தோல்வியாகப் போய்விட்டது. ஆனால் அதை விட மிகப் பெரிய தோல்வியையும் சிங்களப் படைகள் சந்தித்தன.

வன்னியின் மத்தியில் அமைந்திருந்த மிகப் பெரிய முகாமாகிய மாங்குள முகாம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை தொடுத்தனர். ஏறக்குறைய இரண்டு வாரங்கள் கடும் சண்டை நடந்தது. விடுதலைப் புலிகளின் படையணிகளை தளபதி பால்ராஜ் வழிநடத்தினார். 1990ஆம் ஆண்டு நவம்பர் 23ஆம் நாள் மாங்குளம் முகாம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது. சிங்களப் படைகள் சிதறியோடின. அன்றைய காலத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் பெற்ற பெரும் வெற்றியாக மாங்குள முகாம் தகர்ப்பு விளங்கியது. அந்த முகாம் கைப்பற்றப்பட்டதோடு வன்னிப் பெருநிலப் பரப்பு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் வந்தது.

இன்றைக்கு தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தளப் பிரதேசமாக வன்னி திகழ்கிறது. வன்னியை சிங்களப் படைகளிடம் இருந்து கைப்பற்றிய பெருமைக்குரியவர் தளபதி பிரிகேடியர் பால்ராஜ்.

விடுதலைப் புலிகள் முதன் முதலாக பெயரிட்டு நடத்திய மிகப் பெரும் படை நடவடிக்கையாக ஆனையிறவு மீதான ’ஆகாயம் - கடல் - வெளி’ நடவடிக்கை அமைந்தது. ஒரு மாதத்திற்கு மேலாக நடந்த இந்த நடவடிக்கை விடுதலைப் புலிகளுக்கு வெற்றியைக் கொடுக்கவில்லை. தமிழீழத்தின் முக்கிய தளபதிகள் அந்த நடவடிக்கையில் பங்கேற்றனர்.

மிகப் பெரும் தளமாகிய ஆனையிறவின் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு தளபதிக்கு பிரித்துக் கொடுக்கப்பட்டிருந்தது. விடுதலைப் புலிகளின் படையணிகள் ஆனையிறவுத் தளத்தின் சுற்றுலா விடுதி படை முகாமைக் கைப்பற்றிக் கொண்டன.

ஆனையிறவுத் தளத்தின் மீதான சமரில் இந்த முகாம் கைப்பற்றப்பட்டதானது விடுதலைப் புலிகளுக்கு ஒரு வெற்றியாகவும் நம்பிக்கையைக் கொடுப்பதாகவும் அமைந்தது. சுற்றுலா விடுதி படை முகாம் தாக்குதலுக்கு பொறுப்பாக இருந்தவர் தளபதி பிரிகேடியர் பால்ராஜ்.

இன்றைக்கு தமிழீழப் போரில் பெரும் சாதனைகளை நிகழ்த்தி வரும் விடுதலைப் புலிகளின் படைப் பிரிவாகிய ‘சார்ள்ஸ் அன்ரனி படைப் பிரிவு’ அமைக்கப்பட்ட போது, அதன் தளபதியாக பிரிகேடியர் பால்ராஜ் நியமிக்கப்பட்டார்.

*(தொடர்ச்சி 20ம் பக்கத்தில்)*

**Do you run a business?**

**Do you employ staff?**

**Do members of public have access to your business premises?**

*Give **Ragarfield** Insurance Brokers a call to arrange a no obligation quotation for your business / property insurance and if you like the competitive rates we can arrange, you may qualify for free access to a lot of features advising you comprehensively on*

- **Health & Safety**
- **Risk Management**
- **Legal Expenses**

**Covers for shops and businesses can be arranged with excesses as low as**

**£50** for Glass Claims
for Money Claims
for Frozen Food Claims
and for Goods in Transit Claims

Discounts are also available if you have the following

**Alarm, CCTV, Roller Shutters, Claims free experience, Staff living above the shop**

நீங்கள் ஏதும் வியாபாரம் செய்கின்றீர்களா?
உங்கள் நிலையத்தில் பணியாளர்களை அமர்த்தியுள்ளீர்களா?

**ஆபத்து வருமுன் ஆவண செய்யுங்கள்!**

உங்களது ஸ்தாபன காப்புறுதித் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள். எமது சேவையினை ஏற்கும் பட்சத்தில் உங்கள் வியாபாரம் சம்பந்தமான கூடுதல் அறிவுரைகளை இனாமாகப் பெறுவதற்கு சாத்தியம் உண்டு.

உங்கள் அனைத்து காப்புறுதித் தேவைகளுக்கும் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய 35 வருட அனுபவம் கொண்ட முறைக்கேற்றபடி தொழில் புரியும் (Professionlism ) நிபுணர்களாகிய எம்மை நாடுங்கள்.

பல முன்னணி காப்புறுதி நிறுவனங்களிடமிருந்தும் மிகக் குறைந்த கட்டணத்தில எங்கள் சகல காப்புறுதித் தேவைகளையும் பூர்த்திசெய்து கொள்ள அழையுங்கள்.

Most Trades are considered including the following

| | |
|---|---|
| **Supermarkets** | **Builders Merchants** |
| **Grocers** | **News Agents** |
| **Off Licenses** | **Boutiques** |
| **DIY & Hardware** | **Heating & Plumbing** |
| **Fish & Chips** | **Retail & Wholesale** |
| **Restaurants** | **Manufacturers** |
| **Clothing Retail** | **Wholesalers** |
| **Hairdressers** | **Production** |
| **Beauty Saloons** | **Distribution** |

**Need Van Insurance?**

We can arrange best available rates and also Protect your **No Claims Bonus** from 1 year onwards.

**Have 3 or more vehicles?**

We have access to exclusive motor fleet products and can arrange cover with any driver {17+ without any higher excesses} and many more features.

**Ragarfield** can source you great insurance products on excellent terms, to cover **EVERYTHING** that your business needs

We've been around for a While. For 35 years. So we have first rate relationships with leading insurers all over the marketplace.

இன்றே அழையுங்கள்.

Talk to us now. . .

Tel: **01474 32 88 88**

**Ragarfield Limited**
Insurance & Mortgage Brokers
31 Milton Road Gravesend Kent DA12 2RF
Authorized & Regulated by Financial Services Authority

***Your business insurance can also be extended to include the contents in the flat above if required***